Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.7 of 2015**

Deposition of P.W. 8 (L.W.2 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு.செந்தில்குமார்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 10.11.2025.

எதிரிகள் 7, 8 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அப்பா. கோபால்

என்பவரை தெரியும், அவா் எங்கள் ஊர்க்காரர். கோபாலுக்கு 4 மகன்கள். அவருடைய பெரிய மகன் பெயா் சுரேஸ். சுரேஸ் பறையப்பட்டியை சேர்ந்த சுதா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். சுதா ஆதி திராவிடா் இனத்தை சேர்ந்தவர். நானும் என் தங்கை கணவரும் சதீஸ்குமாரும் நண்பர்கள். அதனால் அவருக்கு திருமணம் செய்து வைத்தோம். சுரேசும், அவரது அப்பாவும் ஊரில் நிறைய பேரிடம் கடன் வாங்கியிருந்தார்கள். சுரேஸ் அவரது தம்பியின் படிப்பிற்காகவும், வீடு கட்டுவதற்காகவும் நிறைய கடன் வாங்கியிருந்தார்கள். வாங்கிய கடனை அவர்களால் திரும்ப கொடுக்கமுடியவில்லை. அதனால் சுதா ஆதி திராடவிடா் இனத்தை சேர்ந்தவா் என்பதால் ஜாதி பெயரை சொல்லி திட்டுவதாக சொல்லி வந்தார். அதனால் என் அப்பா ரங்கநாதன் ஊரில் முக்கியஸ்துவர் என்பதால் ஊரில் பிரச்சனை செய்வதாக சொல்லி ஊரை விட்டு ஒதுக்கி வைத்தார்கள். 4.12.2013 ஆம் தேதி நான் வீட்டில் இருந்தேன். அப்போது என் அப்பா ஒரு 5.30மணியளவில் யசோதா பெட்டி கடை முன்பு இருந்த போது சுரேஸ், சுதாவும் கட்டையாலும், கல்லாலும் என் அப்பாவை அடித்ததாக எனக்கு போன் மூலமாக தகவல் வந்தது. நானும், என் தங்கை கணவா் சதீஸ்குமாரும் அங்கு போய் என் அப்பாவை என் அடித்தீர்கள் என்று கேட்டோம்.

2) அப்போது என்னை சுரேஸ், சுதா, கோபால், பழனியம்மாள், ரமேஸ், சங்கர், ரவி கல்லாலும், கட்டையாலும் மூக்கிலும், உடம்பிலும் அடித்தார்கள். என் தங்கையின் கணவர் சதீஸ்குமாருரையும் கல்லாலும், கட்டையிலும் தாக்கியதால் இடது காலில் அடிப்பட்டது. என் அப்பாவிற்கு பற்கள் உடைந்து விட்டது. பக்கத்தில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து நாங்கள் எல்லோரும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். சாட்சி பழனியம்மாள் மட்டும் இல்லை எனவும், மற்றவர்கள் இருப்பதாக கூறுகிறார், 7. 8 எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாக்க வந்த போலிசாரையும் அடித்தார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1, சா.பொ.2னால் தான் எதிரிகள் தாக்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நானும், கோபால் வகையறாவும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நெருங்கிய உறவினர்கள் இல்லை, உறவினர்கள். நானும், 2ம் எதிரியும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். நிலம் சம்பந்தமாக எனக்கும் அவர்களுக்கும் சின்ன சின்ன பிரச்சனை. வழக்கு தாக்கல் செய்யும் அளவில் இல்லை. 21.04.2010ல் நானும், சதீஸ், ஊர்காரர்கள் 1ம் எதிரிக்கும், 2ம் எதிரிக்கும் தீவட்டிப்பட்டி சின்னதிருப்பதி

கோவிலில் திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் காதலித்து வந்தார்கள் என்ற விவரம் நன்றாக தெரியும். சுதா வீட்டில் சம்மதிக்கவில்லை. சுரேஸ் வீட்டில் திருமணத்திற்கு ஒப்புகொண்டார்கள். எந்த பிரச்சனையும் இல்லாமல் அந்த திருமணம் சுமுகமாக நடந்தது என்றால் சரிதான். திருமணத்தின் போது சுதா எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. சுதா, சுரேஸ் திருமணத்திற்கு பிறகு சுரேசின் குடும்பத்தினர் சுதாவை நன்றாக பார்த்து கொண்டார்கள், அவர்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை.

2) கோபால் குடும்பத்தினர் சுரேஸ் பெரியப்பா மகளிடம் ரூபாய் 2 லட்சம் கடன் வாங்கியிருந்தார். அந்த குடும்பத்தை சேர்ந்தவர்களிடம் தலா ரூபாய் 2 லட்சம் வாங்கியிருந்தார். ஊர்கவுண்டர் மகளிடம் ரூபாய் 1 லட்சம் வாங்கியிருந்தார்கள். சத்யாவிடம் கடன் வாங்கிய போது நான் உடனிருந்தேன். சத்யாவிடம் கடன் வாங்கியதற்கு ஆவணம் எதுவும் எழுதப்படவில்லை. அப்போது நான் உடனிருந்தேன். நான் கடனுக்கு ஆவணம் எதுவும் எழுதி வாங்கி கொள்ளுமாறு சொல்லவில்லை. வேறு யாரிடம் என்னென்ன எவ்வளவு கடன் வாங்கப்பட்டது என்று தெரியாது. கோபால் குடும்பத்தினா் யாரிடமும் கடன் வாங்கவில்லை என்றாலும், நான் கடன் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடன் வாங்கியதற்கு ஏதேனும் ஆவணம் என்னிடத்தில் இல்லை.

3) என் அப்பா வேப்பமரத்தூரில் ஒரு முறை 2001 லிருந்து 2006 வரை முன்னால் ஊராட்சி தலைவராக இருந்தார். தற்போதும் வேப்பமரத்தூரில் ஊர்கவுண்டர், மந்திரிகவுண்டர், கோல்கவுண்டர், பூசாரிகவுண்டர் உள்ளார்கள் என்றால் சரிதான். என் அப்பா மேற்சொன்ன பதவிகளில் எப்போதும் இருந்ததில்லை. என் அப்பா ஏழு பஞ்சாத்திற்கு தலைவராக இருந்தார். எங்கள் ஊரில் இருப்பவர்கள் என் அப்பாவின் பேச்சை கேட்கமாட்டார்கள், மற்ற ஊரில் இருப்பவர்கள் கேட்பார்கள். ஊரில் பேசியதை வைத்து தான் சுதாவின் சமூகத்தை பற்றி தெரியவந்தது. 2010 கலப்பு திருமணம் சம்பந்தமாக தருமபுரியில் பிரச்சனை ஏற்பட்டது போது தான், சுதாவின் சமூகம் பற்றி தெரியவந்தது என்றால் சரிதான். ஊரில் கலப்பு திருமணம் சம்பந்தமாக கணக்கெடுப்பு எடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த கணக்கெடுப்பின் போது சுதா வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்று தெரிய வந்தது என்றால் சரியல்ல.

4) 2012 - 2013 வாக்கில் எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா நடந்தது. கும்பாபிசேகத்திற்கு ஒவ்வொரு வீட்டிற்கும் வரி ரூபாய் 15 ஆயிரம் வசூலிக்கப்பட்டது. பழனியம்மாவிடம் ரூபாய் 14 ஆயிரம் வரி வசூலிக்கப்பட்டது என்றால் சரிதான். கும்பாபிசேகத்திற்கு பின்னர் 21.05.2013 முதல் 25.05.2013 வரை மாரியம்மன் கோவில் நடைபெற்றது என்றால் சரிதான். வரி பணம் ரூபாய் 14 ஆயிரத்தில்

ரூபாய் 13 ஆயிரம் எடுத்து கொண்டு கோபால் குடும்பத்திற்கு ரூபாய் ஆயிரம் திருப்பி கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சுதா வேறு இனத்தை சேர்ந்தவா் என்பதால் கோபால் குடும்பத்தையே என் அப்பா தலைமையில் தள்ளி வைக்க தீா்மானம் போட்டோம் என்றால் சரியல்ல.

5) கோபால் குடும்பத்தை சேர்ந்தவர்கள் பொது பாதையில் போககூடாது, பொது நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கூடாது, பொது தண்ணீரை எடுக்க கூடாது கட்டுபாடு போட்டோம் என்றால் சரியல்ல. அவர்கள் ஊரில் இருக்கிறோம், நாங்கள் நிலத்தில் இருக்கிறோம். 2013லிருந்து எதிரிகள் குடும்பத்திற்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோபால் குடும்பத்தினா் பொய்யான வழக்கு போட்டதால் அவர்களுக்கு போலிஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. சுதா குடும்பத்தினா் கோட்டாட்சியா், வருவாய் துறை அலுவலரிடம் மனு கொடுத்தது சம்பந்தமாக என் அப்பா 2, 3 முறை விசாரணையில் கலந்து கொண்டிருப்பார். விசாரணையின் விவரங்கள் எனக்கு தெரியாது. இந்த விசாரணை விவரங்கள் தெரிந்து கொண்டே தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் குடும்பத்தினா் கொடுத்த புகாரில் பேரில் போலிசார் வேப்பமரத்தூா் கிராமத்திற்கு விசாரணைக்கு வந்திருந்தார்கள் என்றால்

சரிதான். ஒரு முறை விசாரணை போது நான் இருந்தேன். 2023ல் போலிசார் வந்த போது நான் இருந்தேன். போலிசார், ஆர்டிஓ, டிஎஸ்பி, விசாரணைக்கு வந்த போது நான் லாரி வேலை சம்பந்தமாக அரியானாவில் இருந்தேன். அவர்கள் என்ன விசாரணைக்காக வந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

6) யசோதா கடைக்கும் எதிரிகள் வீட்டிற்கும் சுமார் 50 மீட்டர் தொலைவில் உள்ளது. என் அப்பாவை அடித்து விட்டதாக எனக்கு போன் வந்த போது நான் என் வீட்டில் இருந்தேன். அப்போது கோபால் வீட்டிற்கு காவலுக்கு 2 போலிசார் இருந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 5 மணி. நான் போய் பார்த்த போது என் அப்பா யசோதாவின் பெட்டி கடைக்கு பக்கத்தில் இருந்தார். அங்கு பொது மக்கள் இருந்தார்கள், கோபால் குடும்பத்தினரும் இருந்தார்கள். நான் வருவதற்கு முன்பாக அங்கு என்ன நடந்தது எனக்கு என்று தெரியாது. என் அப்பாவிற்கு வாயில் அடிப்பட்டு பற்கள் உடைந்தது எனக்கு சரியாக தெரியவில்லை. என் அப்பாவிற்கு பற்கள் கீழேயும் விழுந்து இருந்தது, பற்களும் உடைந்து இருந்தது. மேல், கீழ் தாடை பற்கள் உடைந்து இருந்தது. மேலே எத்தனைபற்கள், கீழே எத்தனை பற்கள் உடைந்து இருந்தது என்று சரியாக தெரியவில்லை. வேறு எதுவும் என் அப்பாவிற்கு அடிப்படவில்லை

7) போலிஸ், கோட்டாசியர், வட்டாசியர் வந்து போன பிறகு என் அப்பாவால் தான் இந்த சம்பவம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நானும், சதீஸ்குமாரும் அரைகுறையாக கட்டப்பட்டிருந்த கோபால் வீட்டிற்குள் நுழைந்து பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. போலிசார் சம்பவம் சம்பந்தமாக விசாரித்திருப்பார்கள், எனக்கு நேரடியாக தெரியாது. பூமாணிக்கம் என்பவர் என் அப்பாவை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். நான், என் அப்பா, சதீஸ்குமார் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டோம். போலிசார் அன்று இரவே 7 மணிக்கு எங்கள் மூவரையுமே விசாரித்தார்கள். அதற்கு பிறகு போலிசார் எங்களை விசாரிக்கவில்லை. போலிசார் வழக்கு சான்று பொருள்களான கல், கட்டைகளை கைப்பற்றினார்களா என்று தெரியாது. என் அப்பா எதிரிகள் குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8) பழைய கோவிலை இடித்து புதுகோவில் கட்டி குடமுழக்கு செய்தோம். எதிரிகள் கோவிலுக்கு வரகூடாது என்று ஆட்சேபனை செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் கோவிலுக்கு வந்து சாமி கும்பிட்டு தான் சென்றார்கள். எதிரிகள் போலிசாரின் பாதுகாப்பில் சாமி கும்பிட வந்தார்கள் என்றால் அவர்களாகவே அது போல் ஏற்படு செய்து கொண்டு வந்தார்கள். என் அம்மா பெயர் ரோஜா. எங்கள் ஊரை

சேர்ந்த ராதாவின் கணவர் பெயர் அழகேசன். எதிரிகள் குடும்பத்தினர் கோவிலுக்குள் வரகூடாது என்று எங்கள் ஊர் பெண்கள் பாயாசத்தில் விசத்தை கலந்ததாக நாளிதழில் வந்தது என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்த புகாருக்கெல்லாம் என் அப்பா பதில் புகார் கொடுப்பார் என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றாலும், என் அப்பா பாப்பிரெட்டிப்பட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அபராதம் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. என் அம்மா ரோஜா மற்றும் ராதா எதிரிகள் குடும்பத்தினர் கொடுத்த புகாரின் பேரில் அவர்கள் போகாததால் தள்ளுபடியாகி விட்டது என்றால் எனக்கு தெரியாது.

*10)* எதிரிகளை சாதியின் பெயரால் ஒதுக்கி வைப்பது தவறு என்றாலும், அவர்கள் பெயரில் பொய்யாக கொடுத்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சா.பொ.*1*, சா.பொ.*2*னால் தாக்கினால் ரங்கநாதனுக்கு பலமாக அடிப்பட்டிக்கும் என்றாலும், நான் சொல்வது போல் எதுவும் நடக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.7 of 2015**

Deposition of P.W. 9 (L.W.5 ) } Prosecution } Defence }

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திருமதி.மாது |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 10.11.2025.

எதிரிகள் 7, 8 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வேப்பமரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆடு, மாடு வளர்த்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும், எங்கள் வீட்டு பக்கத்தில் இருக்கிறார்கள். அ.சா.1, 2ஐ தெரியும். சுரேஸ் குடும்பத்தினர் ஊர்காரர்கள் 22 பேர் வழக்கு போட்டிருக்கிறார்கள். 12 வருடத்திற்கு முன்பாக மாலை 4 மணிக்கு யசோதா கடை அருகே அது சம்பந்தமாக அதிகாரிகள் வந்தார்கள். என்னையும் என்ன பிரச்சனை என்று கேட்டார்கள், அதற்கு நாங்கள் எந்த பிரச்சனையும் இல்லை என்று சொன்னோம். சுரேஸ் குடும்பத்தினரிடம் பணம் கொடுத்தவர்கள் கேட்டதால் பணம் கொடுத்துவிட்டதாகவும், சுரேஸ் குடும்பத்தினர் கேஸ் போட்டு விட்டார்கள். போலிசார் அவர்கள் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு கொடுத்தார்கள்.

2) யசோதா கடை முன்பு எங்கள் ஊர் தலைவர் ரங்கநாதன் 4 மணியளவில் வந்தார். அப்போது ஊர்காரர்கள் போலிசார் வந்து விசாரித்தார்கள் நீ ஏன் வரவில்லை என்று ரங்கநாதனிடம் கேட்டோம். அப்போது சுதா ரங்கநாதனை பார்த்து இந்த புண்டவாயன் செத்தால் தான் ஊர் நிம்மதியாக இருக்க முடியும் என்று சொல்லி சுதா கட்டையால் ரங்கநாதனை கால், கைகளில் அடித்தார். அங்கிருந்த போலிஸ்காரரையும் அவர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் எல்லோரும் தாக்கினாார்கள். பிறகு ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தோம். சாட்சி ஆஜா் எதிரிகளை அடையாளம் காட்டுகிறாா். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1, சா.பொ.2னால் தான எதிரிகள் தாக்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

என்னுடைய சொந்த ஊர் நார்த்தங்கொட்டை, எனக்கு திருமணமாகி வேப்பமரத்தூரில் வசித்து வருகிறேன். கோபால் குடும்பத்தினர் எனக்கு சம்பந்தி உறவுமுறை. நாங்கள் எதிரிகளுக்கு பணம் கொடுக்கவில்லை. அதனால் எங்கள் மீது வழக்கு போடவில்லை. 22 பேர்களும் கடன் கொடுத்ததால் தான் அவர்கள் மீது வழக்கு போட்டார்கள். 22 பேரும் எதிரி குடும்பத்தை சுதாவின் இனத்தை வைத்து இழிவு படுத்தியதால் தான் அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் சாதி பிரச்சனை என்று தான வழக்கு போட்டார்கள். அதை விசாரிப்பதற்காக தான் போலிசார் எல்லோரும் வந்தார்கள். சுதா வழக்கு கொடுத்த பிறகு தான அவா வேறு இனத்தை சேர்ந்தவா என்று தெரியவந்தது. அங்கு அதிகாரிகள வரும போது கோபால் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். ரங்கநாதன அதிகாரிகள விசாரணை செய்து போன பிறகு தான் வந்தார்கள். அப்போது *10* பேர், 20 போ இருந்திருப்பார்கள். அதிகாரிகள சென்ற பிறகு எதிரிகள அவர்களது வீட்டில்

தான் இருந்தார்கள். ரங்கநாதன் வந்த பிறகு அவர்கள் வந்து விட்டார்கள், அவரையும் அடித்தார்கள்.

*2)* நான் சொல்வது பொய் என்றாலும், கோபால் குடும்பத்தினர் அவர்கள் வீட்டின் அருகே போலிஸ் பாதுகாப்புடன் இருந்தார்கள் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி குடும்பத்தினா் நேரடியாக கடன் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது, ஆனால் கடன் கொடுத்தவர்கள் வந்து கேட்பார்கள். பொம்மிடி காவல் நிலைய குற்ற எண் *409/2013* குற்ற வழக்கில் நான் கோபால் அளித்த புகாரின் பேரில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை அன்றைய சம்பவத்திற்கு போலிசாா் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சான்றின் பொருளை போலிசார் எப்போது வந்து கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரிகள் குடும்பத்தினரை சாதியின் காரணமாக ஒதுக்கி வைத்து விட்டு உண்மைக்கு முரணாக அ.சா.*1*, அ.சா.*2*, மற்றும் ஊர்காரர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சா.பொ.*1*, சா.பொ.*2*னால் தாக்கினால் ரங்கநாதனுக்கு பலமாக

அடிப்பட்டிக்கும் என்றாலும், நான் சொல்வது போல் எதுவும் நடக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.